அன்புடையீர்!

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

மேற்படி எமது கல்லூரி முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழக்கூடிய இலங்கைத்தீபகற்பத்தின் மத்திய மாகாணத்திலுள்ள கண்டி மாவட்டத்திலே அமைந்துள்ளது. இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். மிகக்குறைவான அளவில் அரபுக் கலாசாலைகள் அமைந்திருப்பதும் நாம் எதிர் நோக்கும் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும் எனவே அரபுக் கல்லூரிகளின் அவசியத்தையுணர்ந்த உலமாக்கள், த.்.வா பணியிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபடும் நன்மக்களின் மூலம் 1999-05-05 இல் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

22 மாணவர்களையும் 1 ஆசிரியரையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தற்பொழுது 325 மாணவர்களையும், 35 விரிவுரையாளர்களையும், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட 10 பேரையும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இஸ்லாமியக் கல்வியில் தேர்ச்சி பெற்ற, வாழ்க்கையின் எல்லா சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடிய தீன்பற்றுள்ள நன்மக்களை உருவாக்குவதற்காகவே இக்கல்லூரி பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இக்கல்லூரியின் நம்பிக்கையாளர் சபை, இஸ்லாமிய த.்.வா பணியில் பிரசித்திபெற்ற உலமாக்களையும், வியாபாரிகளையும் உள்ளடக்கிய 13 பேர்களைக் கொண்ட ஒரு குழுவாக அமையப் பெற்றுள்ளதுடன், அதன் தலைவராக அல்ஆலிமுல் பாழில் M.I.A.M. ஹனீபா (பஹ்ஜி) அவர்களும் உபதலைவராக அல்ஆலிமுல் பாழில் யூசுப் முப்தி (பின்னூரி) அவர்களும் அதிபராக அல்ஆலிமுல் பாழில் M.H.M. லபீர் (முர்ஸி) அவர்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

**இக்கல்லூரியின் குறிக்கோள்களும், இதுவரை சாதித்த விடயங்களும்**
**கல்லூரியின் குறிக் கோள்கள்.**

- புனித குர்ஆனை மனனம் செய்வதுடன் அதனை விளங்கி நடைமுறைப் படுத்துவதனூடாக சமூக வளர்ச்சிப் பணிகளில் பங்கெடுத்தல்.
- அரபு மொழியையும், இஸ்லாமிய பண்பாடுகளையும் பரவச் செய்தல்.
- இஸ்லாமிய அழைப்புப் பணிகளில் பங்கேற்றல்.
- முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தைக் கற்றுக்கொடுப்பதற்குத் தேவையான சகல வழிமுறைகளையும் விருத்தியடையச் செய்தல்.

**1. I. இஸ்லாமிய கற்கை நெறிகளுக்கான பிரிவு:~**

அதற்காக அமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டம் தப்ஸீர், ஹதீஸ், இஸ்லாமிய மார்க்கச்சட்டம், இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைஅறிவு, இஸ்லாமிய வரலாறு, நற்குணஅறிவு, இஸ்லாமியப்பொருளியல், இஸ்லாமிய வங்கியியல், அரபு மொழி, அரபு இலக்கணம், அரபு இலக்கியம், அரபு சொற்கோப்புக்கலை, போன்ற பாடங்களையும் மேலும் தேவைக்கேற்ப கருத்தரங்குகளையும் பயிற்சிநெறிகளையும். உள்ளடக்கியுள்ளது.

இப்பிரிவுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் 7 வருடங்களாகும்.

### II. அல்குர்ஆன் மனனப் பிரிவு:

இதற்காக அமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் மாணவர்களுக்கு எழுத்துக்களை சரியான முறையில் உச்சரிப்பதற்கும், தஜ்வீத் முறைப்படி அழகாக ஓதுவதற்கும் பயிற்சியளிப்பதுடன் அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்வித்தல். போன்றன அடங்குகின்றன.
இதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலம் 4 வருடங்களாகும்.

### 2. பாடசாலைக் கல்விக்கான பிரிவு:

இதற்காக அமைக்கப்பட்ட பாடத்திட்டம் அரசாகப் பாடசாலைகளின் பாடத்திட்டத்திற்கமைய கணிதம், விஞ்ஞானம், புவியியல் சமூகக்கல்வி, கணனிப்பயிற்சி போன்றவற்றை உள்ளடக்கிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய கற்கை நெறி மற்றும் அல்குர்ஆன் மனனப் பிரிவின் காலப் பகுதிக்குள் பாடசாலைக் கல்வி போதிக்கப் படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### இக்கல்லூரியால் இதுவரை சாதிக்கப்பட்ட விடயங்கள்.

அல்லாஹ்வின் அருளால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 9 வருட காலமாக பலசிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் பல முன்னேற்ங்களைக் கண்டு வருகின்றது. அல்ஹம்துலில்லஹ்

### அவற்றுல் சில..

- 124 ஹாபிழ்களை உருவாக்கியமை.
- அரபு இஸ்லாமிய கற்கை நெறியைப்பூர்த்தி செய்த 20 உலமாக்களை உருவாக்கியமை.
  (அவர்களில் சிலர் வெளிநாடுகளிலுள்ள சில பல்கலைக்கழகங்களில் தமது மேற்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.)
- மாணவர்களின் திறமைகளையும் ஆளுமைகளையும் மேம் படுத்துவதற்காக தேவைக்கேட்ப தகுதி வாய்ந்தவர்கள் மூலம் பல கருத்தரங்குகளையும் பயிற்சி நெறிகளையும் வழங்கியமை.
- தொழுகையறை, வகுப்பறைகள், நூல் நிலையம், கணனிக் கூடம், ஆசிரியர், மாணவர் விடுதிகள், சமயலறை, சாப்பட்டறை போன்றவைகளை உள்ளடக்கிய இரு மும்மாடிக் கட்டடங்களையும் தனக் கென சொந்தமாக்கிக் கொண்டமை.

### கல்லூரியின் தேவைகள்.

1. தற்போது எமது கல்லூரிக்கு அலுவலகம், மற்றும் பாடசாலைக்கல்விகளைப் போதிப்பதற்கான வகுப்பறைகள், விருந்தினர் ஓய்வுவிடுதி, நோயுற்றோர் ஓய்வெடுப்பதற்கான அறை, கேட்போர்கூடம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு புதிய கட்டடமொன்று மிக அத்தியவசிய தேவையாகும். ஏனெனில், இக்கல்லூரியின் மாணவர் தொகை அதிகமாக இருப்பதால் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. இதற்காக உத்தேசிக்கப்பட்ட செலவு 2 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

2. இக்கல்லூரியின் மாதாந்த செலவு பதினைந்து ஆயிரம் அமெரிக்க டொலர்களாகும். (இலங்கை நாணயப்படி 15 இலட்சம் ரூபாவாகும்.)

3. இக்கல்லூரியின் நூல் நிலையத்திற்கு ஏராளமான கிதாபுகளும், இஸ்லாமிய அரபு சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தேவைப்படுகின்றன.

4. ஆசிரியர், உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள்.

**எமது அன்பான வேண்டுகோள்!**

அன்பின் இஸ்லாமியச் சகோதரர்களே அல்லாஹுத்தஆலா அவனின் தீன் மேலோங்குவதற்காக உதவி செய்த கூட்டத்தில் நம்மனைவரையும் சேர்த்தருள் வானாக.! ஆமீன்.

மேற் கூறப்பட்டவை எமது கல்லூரியைப் பற்றிய சுருக்கமான அறிமுகமாகும். மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இக்கல்லூரியின் அவசரமான, அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தங்களுக்கு முடியுமான அளவு உதவிகளை செய்வதுடன் தங்களுக்கு அறிமுகமான கொடைவள்ளல்களின் மூலமாகவும் முடிந்த உதவிகளைப் பெற்றுத்தர முயற்சி செய்யுமாறும் தங்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.

அல்லாஹ்த்தஆலா தங்களுக்கு மேலான நற்கூலியை வழங்குவானாக இந்நற்கருமத்தை அல்லஹுத்தஆலா ஸதகதுல் ஜாரியா என்று கூறப்படக்கூடிய நிறந்தர தர்மமாக ஏற்றுக்கொள்வானாக !

இப்படிக்கு,

...............................
கல்லூரி அதிபர்.

## Our A/C Detail

| | |
|---|---|
| Name of Account: | Dharul Uloom Al Haqqaniya Arabic College. |
| H.N.B: | 014000192774015 (Gelioya Branch) Sri Lanka |